# கொடகவெல பிரதேச சபை
# இரத்தினபுரி மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 மார்ச் 25 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மார்ச் 13 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஜனவரி 27 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய கொடகவெல பிரதேச சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கொடகவெல பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 மார்ச் 29 ஆந் திகதியன்று ரூபா 60,000 செலவழித்து 4 எலோவீல்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இப் பெறுமதி மூலதனமாக்கப்படவில்லை.

(ஆ) 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கணிப்பிடப்படாதிருந்த 2012 ஆம் ஆண்டிற்குரிய கடன்கொடுத்தோருக்கான நிதியேற்பாட்டுக் குறைவாக இனங்காணப்பட்டுள்ள 13 வகைச் செலவினங்களினது ரூபா 556,273

கூட்டுத்தொகையானது மீளாய்வாண்டின் செலவினமாகக் கணக்கிலிடப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்குரிய சரியான முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பண வருவாயை பட்டோலைகள் மூலம் உறுதி செய்து அவற்றைக் கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய மாகாண சபை வேலைப் பெறுவனவாகிய ரூபா 4.206,908 மற்றும் மாகாண சபை வேலைக் கொடுப்பனவாகிய ரூபா 4,628,263 என்பவற்றை வரவு, செலவுத் திட்டத்திலிட்டு அவற்றைக் கணக்காய்விற்கான கணக்கிலிடுவதற்கான எடுக்கப்படவில்லை.

(உ) வணிகச் செயற்திட்டக் கணக்குகளுக்கு வேறாக நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகஞ் செய்து வருடாந்த வரவு, செலவுத் திட்டத்தில் நிதியேற்பாட்டை மேற்கொள்ளவில்லை. மீளாய்வாண்டின் வணிகச் செயற்திட்ட வருவாயாகிய ரூபா 3,350,304 மற்றும் செலவினமாகிய ரூபா 3,351,609 என்பன கணக்கிலிடப்படவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியங்கள் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதி ரூபா 6,924,782 ஆகும். உப பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 8,593,880 ஆகியமையால் ரூபா 1,669,098 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 6,727,944 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 9,855,822 ஆகும்.

## 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாயக்கான தோற்றுவாய் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 2,990 | 2,695 | 295 |
| (ii) | குத்தகை வாடகை | 6,468 | 5,680 | 787 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 529 | 684 | (105) |
| (iv) | பிற வருவாய் | 5,515 | 8,543 | (3,029) |

### 2.2.2 பிற வருவாய்

ரக்வான பழைய சந்தைக் கட்டிடத் தொகுதியில் உள்ள 12 ஆம் இலக்க கடையின் 2007 பெப்ரவரி முதலான வாடகை நிலுவையாகிய ரூபா 8,500 2006 ஜனவரி முதல் மின் கட்டணமாக ரூபா 15,242 என மொத்தமாக ரூபா 23,742 அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 2,117,006 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 1,619,125 |

## 2.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) ஒன்பது மாதங்கள் தொடக்கம் 1 ஆண்டு 11 மாதங்கள் வரையிலான ரூபா 202,697 கூட்டுத்தொகையுடைய முற்பணம் 2013 ஜுலை 11 ஆந் திகதியளவிலும் தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ஆ) சபையில் பணியாற்றி வேலை இடமாற்றம் பெற்ற மற்றும் வேலை இடை நிவர்த்திற்குள்ளான உத்தியோகத்தர்களிடமிருந்தும் 5 ஊழியர்களிடமிருந்தும் ஊழியர் கடன் நிலுவையாக 2013 ஜுலை 09 ஆந் திகதியில் ரூபா 170,622 அறவிடப்படாதிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு
(இ) நிதிக் கட்டுப்பாடு
(ஈ) வருவாய் நிர்வாகம்